Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# நாயக்கர் காலச் சமுதாய மாற்றம்

41

**முனைவர் நா.கவிதா,**
**உதவிப்பேராசிரியர்**, முதுகலை மற்றும் தமிழ் உயராய்வு மையம்,
**தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,**
**சிவகாசி.**

**ஆய்வு நோக்கம்:-**

**சிக்கல்களிருந்து** விடுபட முயற்சிப்பது உயிர்களின் இயல்பு. பகுத்தறிவு கொண்ட பலவகை மனிதர்களால் உருவாகும் சமுதாயம் தன்னைப் பாதிக்கும் சிக்கல்களினின்று விடுபட முயற்சிகள் மேற்கொள்ளுதல் இயற்கைக்கு மாறுபடாத, இயல்பான முயற்சியாகும். இம் முயற்சிகள் நாயக்கர் கால கட்டத்தில் **(கி.பி.13ஆம் நூற்றாண்டு முதல் 16 ஆம் நூற்றாண்டு வரை)** மிக இயல்பாகவே அரங்கேறின. அவ்வகையில் ஏற்பட்ட சமுதாய மாற்றங்களை, நாம் சில இலக்கியச் சான்றுகள் மூலமாக முழுமையாக அறிய இயலுகின்றன. பள்ளு இலக்கியங்களில் சாமிநாதப்பள்ளு, குறவஞ்சி இலக்கியங்களில் திருக்குற்றாலக் குறவஞ்சி, நொண்டி இலக்கியங்களில் செய்தக்காதி நொண்டி நாடகம், போன்ற நூல்களை மட்டுமே முதன்மை ஆதாரங்களாகக் கொண்டு நாயக்கர் காலச் சமுதாய மாற்றங்களை எடுத்துரைப்பதே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

திறவுச் **சொற்கள்:-** நாயக்கர் **காலம்**, குறவஞ்சி, பள்ளு, நொண்டி **நாடகம்**,

**முன்னுரை:-**

**சமுதாய மாற்றங்கள் வரைவிலக்கணம் :-**

ஒவ்வொரு இலக்கியத்திலும் சமுதாய மாற்றங்கள் படைப்பாளனுடைய சமுதாய உணர்வுக்கு ஏற்ப பதிவு செய்யப்படுவது உண்டு. 'சமுதாய மாற்றம்' என்பதற்கு வாழ்வியற் களஞ்சியம், "சமுதாயத்தில் கல்விநிலை, பொருளாதார நிலை ,ஆண் பெண் பாகுபாடு, மக்களின் வயது, பிரிவுகள், தொழில் போன்ற கூறுகள் உள்ளன. ஒரு குறிப்பிட்ட சாதிப் பிரிவின் கல்வி நிலைக்கு ஏற்ப அவர்கள் பயன்படுத்தும் மொழியிலும் சில மாற்றங்கள் ஏற்படுவதைக் காணலாம். அது போன்றே ஒரு குழுவின் தொழில் நிலை, பொருளாதார நிலை போன்ற பல்வேறு காரணிகளுக்கு ஏற்பவும் அவர்களது மொழிப் பயன்பாடு ஓரளவுக்கு மாறி வழங்குவதைக் காணலாம்."[1] என்று வரையறை கூறுகின்றது. எனவே சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட பிரிவினரின்

மொழிப் பயன்பாட்டை ஆராய்ந்தால் சமுதாயத்தில் அப்பிரிவினை நிலைப்பாட்டினை அறிந்து கொள்ளலாம்.

தி.சு.நடராசன் என்ற இலக்கியத் திறனாய்வாளர், "சமுதாயம் என்பதே அதன் தன்னிலைகளினாலும் புறவயத் தாக்கங்களினாலும் மாறுதலுக்குரியது. இம் மாற்றம் முன்னோக்கி அமைவது ; நல்ல இலக்கியம் என்பது சமுதாய மாற்றத்தை உள்வாங்கியிருக்கும் ."[2] என்று சமுதாய மாற்றத்தை உள்ளடக்கிய இலக்கியத்தின் சிறப்பினைக் குறிப்பிடுகிறார்.

மேலும், தா.ஈசுவரபிள்ளை என்னும் ஆராய்ச்சியாளர் சமுதாய மாற்றத்திற்கு இலக்கணமாக ஜான்.எம்.ஷெப்பர்ட் என்ற சமூகவியல் அறிஞர் கருத்தினை ஏற்றுக்கொண்டு, "மிக நீண்ட கால மற்றும் தொடர்புடைய இன்றியமையாமை வாய்ந்த சமுதாய மதிப்புகளைக் கொண்ட சமுதாய அமைப்பில் ஏற்படுகின்ற சில திருத்தங்களைக் குறிப்பது சமுதாய மாற்றம்"[3] என்று குறிப்பிட்டுள்ளார்.

சமூகவியலார் மற்றும் இலக்கியத் திறனாய்வாளர் கருத்துகளை இணைத்து நோக்கினால் பாரம்பரிய மதிப்புகளைக் கொண்ட சமுதாயத்தில் மாற்றங்கள் தவிர்க்க இயலாதவை என்றும் இலக்கியங்கள் அம்மாற்றங்களை உள்வாங்கக் கூடியவை என்றும் கருதிக் கொள்ளத் தடையில்லை. இம்மாற்றங்கள் அரசியல்,பொருளாதாரம் மற்றும் கல்விச் சூழலுக்கேற்ப உருவாகக் கூடியவை. இம்மாற்றங்கள் திடீரென்று உருவாவதில்லை,அவை தொடர்ந்து வரக்கூடிய இயல்புடையன.

இடைக்காலப் பாண்டியர் ஆட்சி வீழ்ச்சியடைந்து தமிழகத்தில் அந்நியர் ஆட்சி தொடங்கிய கால கட்டமே சிற்றிலக்கிய காலம். இக்காலத்தில் சமுதாயத்திலும், மக்கள் பின்பற்றும் கல்வி, கலை, பழக்கவழக்கங்கள் மற்றும் பண்பாட்டு மரபுகளிலும் இலக்கிய நடைகளிலும் குறிப்பிடுமளவு மாற்றங்கள் தோன்றின; அவை படிப்படியாகத் தோன்றின.

**கல்வியில் மாற்றம் :-**

நாயக்கர் கால ஆட்சி முடிவுக்கு வந்த கால கட்டமாகிய 18 ஆம் நூற்றாண்டில் கல்வியில் மாபெரும் மாற்றம் ஏற்பட்டது.

காந்தியவாதியும், வரலாற்று ஆய்வாளருமாகிய தரம்பால் 18ஆம் நூற்றாண்டில் கல்வி நிலை எத்தகைய நிலைவயில் காணப்பட்டது என்பதை "பியூட்டிஃபுல் ட்ரீ" என்னும் புத்தகம் வாயிலாக எடுத்துரைத்துள்ளார. அவர் தமிழ் நாட்டில் காணப்பட்ட கல்வி நிலையினை ஜாதி வாரியாக எடுத்துரைத்துள்ளார். பிரிட்டிஷாரின் ஆட்சிக்கு முந்தைய கால கட்டத்தில், காணப்பட்ட சமுதாய அமைப்பினில் கல்வி நிலை எவ்வாறு இருந்தது என்பதை பின்வருமாறு அட்டவணைப்படுத்தி கூறிச் செல்கின்றார்.

“

| மாவட்டம் | பிராமணர்கள் | சத்ரியர்கள் | வைசியர்கள் | சூத்திரர்கள் | கிறித்தவர்கள் | இசுலாமியர்கள் |
|---|---|---|---|---|---|---|
| வடஆற்காடு | 9.6 | - | 8.66 | 66.76 | 7.4 | 7.59 |
| தென்ஆற்காடு | 9.57 | - | 3.55 | 76.19 | 8.27 | 2.42 |
| செங்கல்பட்டு | 12.75 | - | 6.3 | 71.47 | 6.72 | 2.76 |
| தஞ்சாவூர் | 16.16 | 2.12 | 1.27 | 61.17 | 13.92 | 5.32 |
| திருச்சிராப்பள்ளி | 11.76 | - | 2.25 | 76 | 3.23 | 6.77 |
| மதுரை | 8.67 | - | 8.18 | 52.99 | 21.77 | 8.39 |
| திருநெல்வுலி | 21.78 | - | - | 31.21 | 38.42 | 8.6 |
| கோயம்புத்தூர் | 11.3 | - | 7.59 | 39.15 | 32.38 | 10.12 |
| சேலம் | 10.75 | - | 9.89 | 31.98 | 35.38 | 11.12 |
| சென்னை | 7.01 | - | 15.44 | 68.62 | 6.13 | 2.8 |

”[4]

மேலே கூறிய தரவுகள் வாயிலாக சத்ரியர்கள் என்னும் தனிப்பிரிவினர் மறைவினையும், பிராமணர்கள், சூத்திரர்கள் ஆதிக்கத்துடன் கிறித்தவர்களும் இணைந்து கற்றல் குறித்த விழிப்புணர்வு பெற்ற மக்களாக மாறியுள்ளமையையும் அறிய இயலுகின்றது. அத்துடன் அயல் மொழி பேசும் அயல் நாட்டு சமயம் பின்பற்றிய இசுலாமியர் என்னும் பிரிவினர் உருவான சமுதாய மாற்றத்தினையும் உணர முடிகின்றது.

**பண்பாட்டு மாற்றம்**

பண்பாட்டு மாற்றங்கள் தமிழ் மக்களின் வாழ்க்கை நிலையிலிருந்து இலக்கியங்கள் வரையிலும் காலந்தோறும் பல்வேறு பரிமாற்றத்தை உள்ளடக்கி வலுவும் பொலிவும் பெற்று சிறப்படையச் செய்கின்ற.

சமுதாயத்தில் உருவாகும் எல்லா மாற்றங்களும் பண்பாட்டால் இயக்கப்படுகின்றன என்று கூறுவர். “பண்பாடு நிறுவன மாற்றங்களுக்கு (institutional changes) உரிய அடிப்படையான ஊற்று (main spring) என்றும் மனிதச் சமுதாயம் பண்பாட்டு நிலையில் முன்னமே தீர்மானிக்கப்படுகிறது. எனினும் சமுதாய மாற்றம் பண்பாட்டு மாற்றத்தின் பகுதியே ஆகும்” [5]என்று முக்சு வெபர் கருதுகின்றார்.

மேலும், இந்த மனித சமுதாயம் பண்பாட்டுக் கூறுகளை சில காலங்களில் கடன் வாங்கும் இயல்பினை உடையதாகத் திகழ்கின்ற. “ஒரு தனிமனிதன் ஒரு குழுவினர் பிற மனிதன் அல்லது

குழுவினரிடமிருந்து சமுதாய மதிப்புகள் சமுதாய நியமங்கள் (social norms) போன்ற பண்பாட்டுக் கூறுகளைக் கடன் வாங்குகின்றனர். அப்போது பரவுதல் அல்லது சிதறுதல் வழியாக மாற்றங்கள் ஏற்படுகின்றன."[6] சமுதாய மதிப்புகளில் மாற்றங்கள் பற்றி அறிதற்குப் பல நூற்றாண்டுக் கால வரலாற்றறிவு தேவை. அது இவ்ஆய்வுக்கட்டுரை எல்லைக்கு அப்பாற்பட்டது. ஆதலால் சமுதாய நியமங்கள் – அதாவது தொடர்ந்து வரும் பழக்கவழக்கங்களில் ஏற்பட்ட சில மாற்றங்கள் மட்டுமே இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன.

தமிழகத்தின வடக்கிலும், வடமேற்கிலும் இசுலாமியர், இடையில் நாயக்கர், மராட்டியர், தெற்கில் பாளையக்காரர் எனப் பல மொழி ஆட்சியாளர்க்கிடையே நுழைந்து கலகம் விளைத்த கிழக்கிந்தியக் கம்பெனியார். இவர்களை முந்திக் கொண்டு தமிழகத்தின் கடற்கரையோரங்களில் கால் வைத்த கிறித்துவ பாதிரிமார்கள் எனப் பலவகையானோர் பல்வேறு நோக்கங்களுடன் தமிழகத்தில் வாழ்ந்து கொண்டிருந்த கால கட்டத்தில் உண்டான மரபு மாற்றங்கள் தவிர்க்க இயலாதவை.

அயலார் ஆட்சியின்தொடக்கமாகிய சிற்றிலக்கிய காலத்தில் பிற மொழியின் ஆதிக்கமும் இசுலாமியரின் ஆதிக்கமும் அளவிற்கு அதிகமாகவே காணப்பட்டமையால் பழக்க வழக்கங்களில், அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளில் மிகுதியாகவே அவை மாற்றங்களை ஏற்படுத்தின. ஆதலால் அச்சமுதாயப் பண்பாட்டு மாற்றத்தினை நாயக்கர் காலச் சிற்றிலக்கியங்கள் சித்தரிக்கின்றன.

மேலும், மக்கள் சமுதாயத்தில் மிகுதியான மாற்றம் ஏற்படலாயின. அதிலும் நாயக்கர் ஆட்சியில் மக்கள் வாழ்க்கை நிலையிலிருந்து அரசியல் தொடங்கி அவர்தம் மொழி இலக்கியங்களின் பாடு பொருளிலும் கூட மாபெரும் மாற்றங்கள் ஏற்படலாயின.

**பழக்கவழக்கங்களில் மாற்றம்:-**

பழக்கவழக்கம் என்பது மனிதன்கற்கும் செயலாகும். இது அவனது வளர்ச்சிக்கு இன்றியமையாத கூறாக அமவாதாகும். பழக்கமே சமூக வழக்கமாக மாறும் நிலையினை பின்வரும் கூற்று மெய்ப்பிக்கின்றது. "மக்களின் தேவைகளின் அடிப்படையிலேயே பழக்கங்கள் தோன்றுகின்றன. அவை சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நிலையில் வழக்கங்களாக உருப்பெறுகின்றன."[7] என்று கூறுவர்.

சிற்றிலக்கிய கால கட்டத்தில் காணப்பட்ட அயலார் ஆதிக்கத்தின் தாக்கம் பல நிலைகளில் சமுதாயத்தைப் பாதித்ததுடன், மக்களின் வாழ்க்கை நோக்கங்களையும் மாற்றி அமைத்துள்ளன. அவ்வகையில் இசுலாமியர்கள், நாயக்கர்கள் வருகையால் அவர் தம் உணவு, உடை முறையிலிருந்து பல்வேறு நிகழ்வுகள் தமிழக மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதில் ஒன்று வாசனைப் பொருட்களைப் பயன்படுத்தும் வழக்கம். இவ்வழக்கம் பண்டை காலம் தொட்டே தமிழக மக்களிடம் இருந்துள்ளது. சங்க இலக்கியங்களில் ஆடவர்கள் மார்பிடத்தே சந்தனம் பூசுதலும் , மகளிர் கத்தூரி முதலியவற்றை அரைத்து கிடைக்கும் வாசனைக்குழம்பை தலைமுடிக்கு

அணிதலும் வழக்கமாக இருந்துள்ளது. ஆயினும் இசுலாமியர்களின் வரவால் அத்தர், ஜவ்வாது போன்ற பொருட்களைப் பயன்படுத்தும் முறைமை மிகுதியாகவே பழக்கத்தில் காணப்பட்டது.

சிற்றிலக்கியங்களில் சாமிநாதப்பள்ளு,செய்தக்காதி நொண்டி நாடகம் எனும் நூல்களில் வாசனைப் பொருள் பயன்பாடுகள் குறிக்கப்பட்டுள்ளன. சாமிநாதப்பள்ளுவில் இளையபள்ளி பயன்படுத்தும் வாசனைப் பொருட்களாக சவ்வாது, மகாப்புனுகு போன்ற பொருட்களைப் பற்றியும் ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.இதனை,

“வாசமிகு….சவ்வாது,
மகாபுனுகுங் கமகமகமவென,
வனமணி மேகலை மருங்கில
கமதாதி விலக”(சா.ப.,செ.எ.9)

என்ற பாடலில் காணலாம்.

செய்தக்காதி நொண்டி நாடகத்தில் ஒடுங்காப்புலிக்கு பரத்தை உடலில் பூசுவதற்கு சவ்வாது தருவதாகச் செய்தி உள்ளது.

“புகுந்தேனை யாதரித்தாள் தங்கள்
பூருவசி நேகம் போல் சோறுந் தந்தாள்
மிகுந்த பரிமளமு முடல்
மீதினிற் பூசச் சவ்வாதுந் தந்தாள்”
(செ.நொ.நா.,செ.எ.26.)

என்பதில் வாசனைப் பொருளாகிய சவ்வாதினைப் பயன்படுத்தும் வழக்கம் இருந்தமைத் தெரிகிறது. சவ்வாதினை வாசனைப் பொருளாகப் பயன்படுத்தும் வழக்கம் இசுலாமியர்க்குரியத. அப்பழக்கம் தமிழர் பண்பாட்டில் கலந்து விட்டது என்ற கூறலாம்.

அடுத்ததாக உணவு முறைகளில் அயலவர் ஆதிக்கத்தால் தமிழக மக்களிடம் பல மாற்றங்கள் ஏற்படலாயின. இசுலாமியர்களின் ஆதிக்கம் நிரம்பிய பாளையத்தில் அவர்களுடைய உணவ வழக்கங்கள் நமது மக்களிடம் கலந்து விட்டன. சுலூபுகான் கூடாரத்திற்குச் சென்ற, ஒடுங்காப்புலிக்கு
இசுலாமியர்களின் வழக்கப்படி கறிகளும் ,ரொட்டிகளும் வழங்கப்பட்டமையை,

“கறிகளும் ரொட்டிகளும் அவரவர்
கைதோறு மெய்வழக்க செய்தார்களே”
(செ.நொ.நா.,செ.எ.97)

என்னும் பாடல்வரிகளால் உணரலாம்.இசுலாமியர் பயன்படுத்திய, “ரொட்டி, ஒறள் முட்டசுர்க்கா, மசுகோத்து, பத்தி, பிரியாணி, சக்கோ போன்ற உணவுப் பெயர்களும் தமிழில் கலந்தன”[8] என்ற க.காந்தியின் கூற்று உணவுக் கலப்பினை உறுதிப்படுத்துகிறது.

குறி கூற வந்த குறத்தி தனக்கு வேண்டிய பொருளைக் கேட்கும் பொழுது சீனத்திலிருந்து

கப்பலிலே வந்திறங்கிய புகையிலையைக் கொஞ்சம் கிள்ளித்தா என்று கூறுகிறாள்.

“தின்ன இலை யும் பிளவும் அள்ளித்தா அம்மே – கப்பற்

சீனச் சரக் குத்துக்கினி கிள்ளித்தா அம்மே” (திருக்.குற்.,செ.எ.,2-17)

இவ்வரிகள் அண்டை நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட வாசனைப் புகையிலையை உட்கொள்ளும் வழக்கம் இருந்தமையை எடுத்துரைக்கிறது.

மக்கள் அணிகின்ற உடைகளிலும் நாயக்கர் ஆட்சிகளில் மாற்றம் ஏற்படலாயின. உடைகளுக்கென நாயக்கர்கள் பெருஞ் செல்வத்தை செலவிட்டனர். மேலும் மேம்பட்ட துணிகளை நெய்தல் பொருட்டு திருமலை நாயக்கர் மதுரையில் சௌராஷ்டிரர்களை குடியமர்த்தினார் என்றும் கூறுவர். ஆக ஒரு குறிப்பிட்ட இன மக்களையே தங்களது அன்றாடத் தேவைப் பூர்த்திகளுக்காக தமிழக மக்களுடன் இணைந்து வாழச் செய்தார்கள் நாயக்கர்கள் எனலாம். ஆடைகளில் அவர்கள் கொண்டிருந்த ஆர்வம் சிற்பங்களிலிருந்தும்,ஓவியங்களிலிருந்தும் அறியலாம்.

**கலையின் வளர்ச்சி**

நாயக்கர்களும் மராட்டியர்களும் இசைக்கலையில் ஈடுபாடு கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். அவர்தம் ஆட்சியில் தெலுங்கு கீர்த்தனைகள் எத்தகைய வளர்ச்சியினையும் மாற்றங்களையும் பெற்றன என்பதை பின்வரும் பகுதிகள் இயம்புகின்றன. சோழர் காலத்தில் நிலவி வந்த புராண பாடங்களே (கதை சொல்லும் போக்கில் இடையிடையே நாடகப் போக்கில் உரையாடல் விரவி அமைந்த இசைப்பாடல்) கீர்த்தனை நாடகங்களாக உருப்பெற்றன. பல்லவி, அனுப்பல்லவி, சரணம் என்ற உறுப்புக்களைக் கொண்டு ராகம், தாளம் ஆசிரியராலேயே வகுக்கப் பெற்றுப் பாடப்படும் தெலுங்கு கீர்த்தனைக்கலை பதினெட்டாம் நூற்றாண்டில் நாயக்கர்கள், மராட்டியர்களால் வளர்ச்சி பெற்றன.

தெலுங்கு கீர்த்தனைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்ட இக்கால கட்டத்தில் பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம் போன்ற தமிழிசை நாடக நூல்கள் பல தோன்றின. தமிழ் நாட்டு அரசியலின் சீர்கேடான நிலையில் தமிழிசைக் கலையை வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் சென்றவர் நால்வராவர். “பாபநாச முதலியார், சீர்காழி அருணாச்சலக் கவிராயர், தில்லை விடங்கர் மாரிமுத்தாப்பிள்ள, மேலகரம் திரகூட இராசப்பக் கவிராயர் என்போர். பாபநாச முதலியார் பல தனிக்கீர்த்தனங்களும், இரு குறவஞ்சி ஆகிய இசைப் பிரபந்தங்களும் செய்திருக்கிறார். அருணாச்சலக் கவிராயர் இராம நாடக கீர்த்தனையும், அனேக தனிக் கீர்த்தனங்களும், சிர்காழி தலபுராணம் முதலான பல தமிழ் நூல்களும் பாடியுள்ளார். மாரி முத்தாப் பிள்ளை பல இலக்கிய சிறுபிரபந்தங்களும். சில நடராசர் கீர்த்தனைகளும், பதங்களும் பாடியிருக்கிறார். திரகூட இராசப்பக் கவிராயர் குற்றாலக் குறவஞ்சி, திருக்குற்றாலாப் புராணம், மற்றும் பல பிரபந்தங்களும் இயற்றியுள்ளார். இவர்களுடைய படைப்புகள் யாவும் தமிழிசைக்கலைக்கு ஆதரவு மங்கிய கால கட்டத்தில் இசைக்கலையை எடுத்து நிறுத்தச் செய்த

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

சிறு முயற்சியின் விளைவே ஆயினும் அந்நியர் ஆதிக்கத்தில் இம் முயற்சி இவர்கள் வசம் நெடுங்காலம் நீடிக்கவில்லை” [9] ஆக தமிழர் அல்லாத பிறர் தமிழகத்திற்குள் புகுந்து ஆட்சி செய்யத் தொடங்கிய காலத்தில் நிகழ்ந்த பண்பாட்டு கலை மாற்றங்களை உணர முடிகின்றது.

தொகுப்புரை

நாயக்கர் காலச் சமுதாயத்தில் அரங்கேறிய வேறுபட்ட நிகழ்வுகளால் பல்வேறுவிதமான மாற்றங்கள் ஏற்பட்டன. பண்பாட்டு மாற்றங்களில் தொடங்கி கலப்பு குலங்கள் ஏற்படும் வரையிலுமான மாற்றங்கள் உருவாகின. அயல் நாட்டோர் பலரின் வருகையால் உணவு, உடை பழக்கவழக்கங்கள் யாவற்றிலும் கலாச்சார மாற்றங்கள் ஏற்பட்டன. இதனை நாயக்கர் காலச் சிற்றிலக்கியங்கள் பல்வேறு வழியில் பதிவு செய்துள்ளன. இசைக்கலையிலும், இசுலாமியர், மராட்டியர் சிந்தனைகள் புகுத்தப்பட்டன. தனித்மிழர் என்ற இனம் இல்லாமல் பல்வேறு வழிகளில் கலப்பு இனங்கள் தோன்றின. இவையே நாயக்கர் காலகட்டத்தில் தோன்றிய சிற்றிலக்கிய கால மாற்றங்களில் முதன்மையானது என்று கூறலாம்.

குறிப்புகள்

1. வாழ்வியற் களஞ்சியம்,தொகுதி – எட்டு, ப.468.
2. தி.சு.நடராசன்,திறனாய்வுக்கலை,ப.65.
3. நா.ஈசுவரப்பிள்ளை, பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமுதாய மாற்றங்களும் தமிழ் இலக்கியப் போக்குகளும், ப.92
4. www.keetru.com தரம்பால் நேர்காணல், ப.10.
5. நா.ஈசுவரப்பிள்ளை,மு.நூ.,ப.19.
6. மே.நூ.,ப.21.
7. க.காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்,ப.14.
8. க.ப.அறவாணன், தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள், ப.234.
9. மு.அருணாச்சலம், தமிழ் இசை இலக்கண வரலாறு,ப.406